TAMIL NADU LEGISLATIVE LIBRARY
3 - DEC 1981
MADRAS-600 009

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1981 ஏப்ரல் 15

சித்திரை 3, துன்மதி — திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.''

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது, அதற்கு வேண்டிய பொருள், அதற்கு ஏற்ற கருவி, பொருத்தமான காலம், செய்வதற்கு உகந்த முறை ஆகிய இந்த ஐந்தையும் மயக்கம் தீர எண்ணிப்பார்த்துபின்பு அந்தச் செயலைச் செய்ய வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்பெற்றோர்.

* வினா எண். 754-அ— திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் குழுவினால் நடத்தப் பெற்ற தேர்வில் தேர்வுபெற்ற சுமார் 4,000 பேருக்கு 8 மாதமாகியும் வேலைக்குரிய உத்திரவு பிறப்பிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) பல்லாண்டுக் காலம் தற்காலிகமாகப் பணிபுரிந்தவர்களை நிரந்தரப் பணியமர்த்துமுகத்தான் டிசம்பர் திங்கள் 1977 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழு மூலம் நடத்தப்பெற்ற சிறப்புத் தேர்வில் 4,493 பேர் அமைச்சுப் பணி, 910 பேர் செயலகப் பணிக்குமாக, இந்நிலைகளில் நடந்த இத் தேர்வில் தற்போது

3 - DEC 1981



தலைமைச் செயலகப் பணியே வேண்டுமென்று விரும்பிக் காத்திருக்கும் 169 பேரைத் தவிர மற்ற அனைவருக்கும் நியமன உத்திரவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்துள்ளபடி பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறவர்கள் எல்லாம் பெர்மனண்டாக வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா ? மேலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இன்னும் வேலையில் அமர்த்தப்படவில்லை என்று அறிவித்தார்கள். வேலைகள் காலி இருப்பதாகவும் சொன்னார்கள். அதே நேரத்தில் ஏற்கனவே பல இடங்களில் வேலை பார்த்து வந்தவர்கள்தான் சர்வீஸ் கமிஷன் எழுதி தேர்வுபெற்று வந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கெல்லாம் உடனடியாக வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, தற்காலிகமாக வேலை பார்த்து, பிறகு வேலை பெறாமல் இருந்தவர்களுக்கு என்று சர்வீஸ் கமிஷன் மூலம் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. அதில் அமைச்சுப் பணியைச் சேர்ந்தவர்களும், தலைமைச் செயலகப் பணியைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டார்கள். அமைச்சுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 4,493 பேர்களும் நிரந்தரமாக பணியில் அமர்த்தப்பட்டுவிட்டார்கள். தலைமைச் செயலகப் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 910 பேர்களில் 348 பேர்கள் தலைமைச் செயலகப் பணியில் அமர்த்தப்பட்டுவிட்டார்கள். தலைமைச் செயலகப் பணியில் ஆண்டுக்கு 120 முதல் 140 இடங்களே காலி ஏற்படக்கூடும். காலி ஏற்படும்போதுதான் மீதமுள்ளவர்களையும் அமர்த்த முடியும். ஆகையால் பணிக்கு அமர்த்தப்படாதவர்களை அமைச்சுப் பணியில் இடம் காலி இருக்கிறது; அதில் சேர விருப்பமா என்று கேட்டதில் 342 பேர் அந்த வேலை கொடுத்தாலும் போகிறோம் என்று சொல்லி, போய்விட்டார்கள். 169 பேர்கள் மட்டும் தலைமைச் செயலகத்தில்தான் வேலை கொடுக்க வேண்டும்; வேலை காலி ஏற்படும்போது பெற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி, காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காலி ஏற்படும்போது அந்த இடத்தில் அவர்கள் அமர்த்தப் படுவார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சுப் பணியில் இடம் காலி இருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் காலியாக இருக்கும் இடத்தில், தேர்வு செய்யப்பட்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் தாங்களே முன்வந்து அந்த இடத்துக்குப் போவதாக ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு அங்கே நிரந்தரமாக வேலை கொடுக்க அரசு முன்வருமா ?

1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்களுக்கும் சேர்த்துத்தான் விருப்பம் கேட்கப்பட்டது. ஆனால் 342 பேர்கள். அமைச்சுப் ப ரிகாலியாக இருந்தால் அங்கே போகிறோம் என்று சொன்ன தால் அவர்கள் அமைச்சுப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார் கள். 169 பேர் தலைமைச் செயலகத்தில் பணி காலி ஏற்படுகின்ற போது செல்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் வேறு பணியில் சேருவதற்கு முன் வந்தால் அவர்களை அமைச்சுப் பணிகளில் காலியிடங்கள் ஏற்படுகின்றபோது சேர்த்துக்கொள்ள லாம். ஆனால் தலைமைச் செயலகத்தில்தான் சேருவோம் என்று சொல்கின்றபோது இங்கே காலியிடம் ஏற்படுகின்ற போதுதான் அவர்களை சேர்த்துக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது தேர்வு பெற்று தலைமைச் செயலகப் பணிக்காகக் காத்திருப்பவர்கள் 169 பேர் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இங்கே இடம் காலி இல்லை என்று சொலகிறோம். ஆனால் தலைமைச் செயலகத்தில தற்போது நூற்றுக் கணக்கான தற்காலிக ஊழியர் கள் பணியாற்றுகிறார்களே, அந்த இடங்களில் இந்த நிரந்தரப் பணியாளர்களை அதாவது தேர்வு ஆணை மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை நியமித்தால் என்ன என்பது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவ ரவர்களே, தலைமைச் செயலகத்தில் இடங்கள் காலி ஏற்படு கின்றபோதுதான் அவர்களை நியமிக்க வேண்டும். அதாவது இவர்கள் எல்லாம் நிரந்தரப் பணிக்காக தேர்ந்தெடுத்து வைக்கப் பட்டிருக்கிறார்கள். நிரந்தரமாக இடம் காலி ஏற்படுகின்ற போதுதான் நியமிக்க வேண்டும். ஆனால் தற்போது தற்காலிக மாக பணிபுரிபவர்களை நீக்கி விட்டு ஏன் இவர்களை அந்தப் பணிகளில் நியமிக்கக் கூடாது என்பது பற்றிய விவரங்கள் தற் போது இல்லை. அது குறித்து தனியாகத்தான் ஆராய வேண்டும். ஆனால் தற்போது பணிபுரிபவர்களை வெளியே அனுப்பிவிட்டு மற்றவர்களை சேர்த்துக் கொள்ளவே பெர்மனன்ட் போஸ்ட் ஏற்பட்டால்தான் அது முடியும். அப்போதுதான் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய சூழ் நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS